1970 நவம்பர் 27] [பேரவைத் தலைவர்]

என்ற காரணத்தை ஒட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி இனி நடைபெறப்போகிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுக்கக்கூடாது என்பதினாலும், ஸ்ட்ரைக்குகளைப்பற்றி விவாதிப்பதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கக்கூடாது என்று விதி முறைகள் இருப்பதன் காரணத்தினாலும், இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

(ஈ) உணவு தானியங்களின் விலைக்குறைவால் விவசாயிகளின் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. ஆர். நல்லசிவன் அவர்கள் உணவு தானியத்தின் தற்போதைய விலை நிலவரம் அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைந்துவிட்டதன் காரணமாக மாநிலத்திலுள்ள விவசாயிகளின் நிலை பாதிக்கப்பட்டு, உணவு தானிய உற்பத்தி குறையும் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வு தாழ்வு என்பது நாட்டிலே அவ்வப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) காவிரி நீர் குறித்து மைசூர், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே ஏற்பட்டுள்ள விவாதமும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. இராமமூர்த்தி அவர்கள்,

"The impact on our State because of the situation created over the Cauvery Water dispute between Mysore, Kera'a and our என்பதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற காரணத்தினால், நான் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: I am no disputing your ruling இந்தப் பிரச்சினை பல்வேறு நேரங்களில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பல அறிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, இந்தப் பிரச்சினை முடிவடையாதது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் நாள்தோறும் விவாதிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகளும், பல்வேறு அரசியல் காரணங்களும் தலைவர்கள் மீது சுமத்தப்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்கவேண்டிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன......

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS